31st October 1958]

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : நமது ராஜ்யத்தில் நடத்தக்கூடிய தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு, மத்திய சர்க்கார் கொடுக்கும் நிதி உதவி இலவசமாகக் கொடுக்கப்படுகிறதா, அல்லது கடனாகக் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குடிசைத் தொழில் முறையில் நடத்தப்படுகிற தொழில்களுக்கு காதி வில்லேஜ் இண்டஸ்டிரீஸ் கமிஷன் கடனாகவும், மற்றும் மானியமாகவும் உதவி தருகிறது.

SRI A. GOVINDASAMY : அரசாங்கம் நடத்துகிற இந்தத் தீக்குச்சித் தொழிற்சாலை லாபகரமாக நடக்கிறதா அல்லது நஷ்டத்தில் நடக்கிறதா ? தரம் எப்படியிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தரம் உயர்ந்த தரம் தான். ஆகவேதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதிலே நஷ்டம் ஒன்று மில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தத் தொழில் நம்முடைய ராஜ்யத்திலே குடிசைத் தொழில் அடிப்படையில் நடக்கிறது. ஆனால் இதர மாகாணங்களிலே இத் தொழில் பாக்டரி அடிப்படையிலே நடத்துவதற்காக லைசென்சுக்காக விண்ணப்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. அது நமது தொழிலை பாதிக்கும் என்று சர்க்காரின் கவனத்திற்கு தகவல் வந்துள்ளதா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம்முடைய மாகாணத்திலேயும் பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகளைப் புறக்கணிப்பதற்கு இல்லை. ஆனால் மத்திய ஸ்தாபனமாகிய காதி வில்லேஜ் இண்டஸ்டிரிஸ் கமிஷன் இது எவ்வளவு தூரம் சிறிய தொழிலாக இருக்கலாம், எவ்வளவு தூரம் பெரிய தொழிலாக்க அனுமதி அளிக்கலாம் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : நம்முடைய ராஜ்யத்திலே உற்பத்தியாகக்கூடிய தீப்பெட்டிகள் நம்முடைய தேசத்திலே உற்பத்தியாகிற தீப்பெட்டிகளில் முதல் தரமானது என்பது சர்க்கார்க்குத் தெரியுமா? இந்தத் தொழிலின் அபிவிருத்திக்குப் பாதகமாக இருப்பது மத்திய சர்க்காரின் வரிவிகிதம். ஆகவே சலுகை அளிக்குமாறு மத்திய சர்க்காருக்கு எழுதுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் சற்று அடக்கமாகச் சொன்னேன். கனம் அங்கத்தினர் முதல்தரம் என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ளுகிறேன். வரி விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டு தான் வருகிறது.

Planting palmyra trees along sea coasts and in forest

* 742 *Q*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கடற்கரை ஓரங்களிலும் காடுகளிலும் செலவு அதிகமில்லாமலும், பயனுள்ளதுமான பனை மரங்களை உற்பத்தி செய்ய அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As regards planting of palmyra in reserved forests, 100 acres are taken up by the Forest Department annually for dibbling with palmyra seeds in the Teri Reserved Forests of Tirunelveli (South) Division, in accordance with the prescriptions of the Working Plan. As regards the sea-coast, planting of all kinds of trees including palmyra trees which would serve as wind-break in coastal areas has been recommended by the State Advisory Committee constituted under

the Emergency Relief Organization Scheme in December 1957. Suitable instructions have been given by Government to the Board of Revenue and the Chief Conservator of Forests, on this recommendation. Palmyra is also advised to be planted along with other trees in connection with the Tree Planting Campaign. Apart from these, there is no programme to plant palmyra along the sea-coast and in the reserved forests.

SRI A. VEDARATHNAM : 100 ஏக்கரா பனைமரம் சாகுபடிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அது எந்த இடத்தில் என்பதைக் கூறமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேரிக்காடு என்று இப்பொழுது சொன்னேன். அது திருச்செந்தூர் தாலுகாவில் இருக்கிறது. அது மணற்பாங்கான பிரதேசம். அங்கே ஏராளமாக பனை மரம் இருக்கிறது. மேற்கொண்டும் பனைமரம் பயிரிடுவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI M. S. SELVARAJAN : கற்பக விருக்ஷமான பனை மரங்களை புதியதாக நடுவதற்கு மான்யம் அளிப்பதுடன், இருக்கும் பனை மரங்களுக்கு ஜீவசக்தி ஊட்டுவதற்கு இன்ஜெக்ஷன் முறை போதிய அளவிலே பரீட்சை செய்து பார்க்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அந்தப் பிராந்தியத்தில் வசிக்கிறார்கள். பனை மரத்தின் அருமை அவருக்கு நன்றாகத் தெரியும். அதை பாதுகாப்பதற்கு எந்த வகையிலே கவனம் செலுத்தப்படமுடியுமோ, அவ்வாறு கவனம் செலுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal before the Government to extend the scheme to all interior villages wherever there are Government poramboke lands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, at present there is no such proposal. That would depend on the kind of land concerned.

SRI A. VEDARATHNAM : பனை மரம் சாகுபடிக்கு எந்தவிதமான செலவும் கிடையாது, விதை போடுவதைத் தவிர. அதற்கு நல்ல நிலம் வேண்டிய அவசியம்கூட இல்லை. எந்த இடத்திலும் இந்த மரம் வளரக் கூடும். ஆகவே, அதை ஏராளமாக உற்பத்தி செய்வதில் என்ன சிரமம் இருக்கிறது ? அதை விருத்தி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பனை மரம் எங்கும் வளரும். அது மட்டுமல்ல. மனித முயற்சியின்றி, இயற்கையிலேயே அது வளர்ந்தும் வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் அறிவார்கள். இருந்தாலும், எந்த வகையில் நாம் முயற்சி எடுத்துக்கொண்டு இதை விஸ்தரிக்க முடியுமோ, அந்த வகையில் அந்தப் பிராந்தியத்திற்குத் தகுந்தவாறு கவனம் செலுத்தப்படுகிறது.

SRI N. MARUDACHALAM : பனை மரத்தைவிட தென்னை மரம் ரொம்பவும் விசேஷமானது. தென்னை மரத்தை வளர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பனை மரத்தையும், தென்னை மரத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இல்லை. தென்னை மரம் வளர்ப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

SRI R. KRISHNASAMI NAIDU : கண்மாய் கரைகளிலே பனை மரங்களை நெருக்கமாக நடுவதினால் அந்தக் கரைகளிலுள்ள மண் சீக்கிரமாக கரைவது இல்லை. கரைகள் பலப்படுகின்றன. ஆகை

31st October 1958]

யினாலே, சர்க்கார் எல்லா கண்மாய் கரைகளிலும் பனை மரங்களை ஊன்று வதற்கு ஏற்பாடுகள் செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கண்மாய் கரைகளில் பனை மரங்களை வைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை. எதெது தகுதியானதோ, அதைச் செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுவருகிறது.

Schools for Yandal and Perumalpet villages

*743 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) போளூர் தாலூகா, எந்தல், பெருமாள்பேட்டை கிராமங்களுக்குப் பள்ளி தேவையென்று மகஜர் வந்ததா ?

(ஆ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A petition was received by the Divisional Inspector of Schools, Coimbatore.

(*b*) The petition was rejected by the Divisional Inspector.

SRI S. M. ANNAMALAI : நான் இரண்டு கிராமங்களைப்பற்றி கேள்வி கேட்டிருக்கிறேன். இரண்டு கிராமங்களைப்பற்றியும் தனித்தனியாக பதில் சொல்லவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

Mallattaru channel

*744 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to Question No. 285, answered on 11th March 1958—

(*a*) whether the scheme for remodelling of the 'Mallattaru' channel in Lalgudi taluk, Tiruchirappalli district, has been got ready;

(*b*) the details of the scheme; and

(*c*) when the same will be implemented?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Detailed investigation is to be done for remodelling the channel and the details will be known only on completion of the investigation. Necessary proposals have been called for and they are awaited.

SRI S. LAZAR : இந்த வாய்க்காலின் பாசனத்தினால் ஆயிரக் கணக்கான ஏகர்கள் பலன் அடைகின்றன. "ரெகுலர் இர்ரிகேஷன் சேனல்" ஏற்படுத்தினால் உணவு உற்பத்திக்கு உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் இதைத் துரிதப்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : நான் பதிலில் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். சீப் என்ஜினியர் அவர்கள் ஜில்லா சூபரின்டென்டிங் என்ஜினியரிடம் வெகு சீக்கிரம் ஸ்பெஷல் ஸ்டாப் நியமிப்பதற்கு "பிரபோஸல்ஸ்" அனுப்பும்படி கேட்டிருக்கிறார்கள். அதனால் வேலை துரிதமாக நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.